


# இந்துவின் வீச்சு இதழ் - 04

01.07.2020 தொடக்கம் 30.09.2020 வரை



**பரிவார பாலசுப்பிரமணியர்**


**போசகர்:**

திரு.இரட்ணம் செந்தில்மாறன்
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**பொறுப்பாசிரியர்கள்**

திரு.சி.பரணீதரன்
(உப அதிபர்)

திரு.கு.மகிழ்ச்சிகரன்
(வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்)

**வடிவமைப்பு**
திருமதி.சசீதா மணிவண்ணன்

**வெளியீடு :- 04.04.2023**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
021 222 2431
Principal@jhc.lk
www.facebook.com/
JaffnaHinducollegeoffcial


**அதிபரின் உள்ளத்திலிருந்து...**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகளின் வீச்சின் தொடர்ச்சியாக 2020 ம் ஆண்டின் மூன்றாவது காலாண்டிதழ் வெளிவருவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இந்துவின் வரலாற்றில் ஒரு தொற்று நோயின் இடர்காலத்தை எதிர் கொண்ட பதிவுகளின் தொடர்ச்சியாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை நிகழ்நிலையில் முன்னெடுத்தல் மற்றும் சமகாலத்தில் பாடசாலையின் ஏனைய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளுதல் என்பன இக்காலப் பகுதியின் சவாலாக அமைந்தது. இவ்விதழ் மேற்குறித்த இவ்விடயங்களைத் தாங்கி வெளிவருகின்றது.

பெருந்தொற்று இடர்காலத்தை எதிர் கொள்வது மற்றும் மந்தமான பொருளாதார நிலையில் மாணவர்களின் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்திவிடாது மாணவர்களையும் பெற்றோரையும் இயங்கு நிலையில் வைத்திருப்பது என்பது பாடசாலையின் பிரதான பணியாக இருந்தது. அதே நேரம் பாடசாலையின் வளர்ச்சிப் பணிகள், நீண்டகாலத்தை நோக்கியதான அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்க வேண்டிய தேவை என்பவற்றை நாம் உணர்ந்திருந்தோம். அந்த வகையில் தொடர்ச்சியாக நடை பெறும் செயற்பாடுகளை இந்த வீச்சினூடாக பகிர்ந்து கொள்வதில் நான் பெருமையும் மகிழ்ச்சியுமடைகிறேன்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு எனக்கு உறுதுணையாக இருக்கும் பழைய மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் எனது நன்றிகள். மேலும் எமது ஆசிரியர்களின் இயல்பூக்கமான செயற்பாடுகள் யாழ் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு மிகுந்த பங்காற்றுகின்றது. மாணவர்களின் வளர்ச்சியே எமது தேசத்தின் வளர்ச்சி என்பதனால் அனைவரும் தொடர்ந்தும் செயற்பட வேண்டும் என்ற செய்தியை இந்த வீச்சினூடாக நான் பகிர்ந்து கொள்கிறேன்.

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு பொருளாதாரமும் நெருக்கடி நிலையும் தடையாக இருக்கக் கூடாது என்பதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உறுதியாக இருக்கின்றது.

திரு.இரட்ணம் செந்தில்மாறன்.

அதிபர்.

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 23.06.2023ல் வெளியிடப்பட்டது

## மைதானப் புனரமைப்பு

♦ 2020.07.03 அன்று யாழ் இந்துக்கல்லூரி ஐக்கியராச்சிய பழைய மாணவர் சங்கத்தின் "திடல்" திட்டத்தின் கீழ் சகல வசதிகளையும் உள்ளடக்கியதான வடமாகாணத்தின் சிறந்த பாடசாலை விளையாட்டு மைதானமாக யாழ் இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டு முதல்கட்ட வேலைகள் நிறைவடைந்து பாடசாலையிடம் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. திரு.ஹரிகரன் ஒப்பந்தக்காரரிடம் பொறுப்பேற்று விளையாட்டு மைதானம் பாடசாலையிடம் கையளிக்கப்பட்டது. பாடசாலை சமூகத்தினர், பழைய மாணவர்கள், திடல் திட்டத்தினை மேற்பார்வை செய்த மற்றும் புலமை ஆலோசனைகள் வழங்கிய BDCE நிறுவனத்தினரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.





♦ 2020.08.24 அன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஐக்கியராச்சிய பழையமாணவர் சங்கத்தின் "திடல்" செயல்திட்டத்தின் இரண்டாம் பாகமாக பன்னிரண்டு மில்லியன் ரூபா நிதியில் யாழ் இந்துக் கல்லூரி விளையாட்டு வீரர்களிற்கான கழகமனை - Club house கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற்றது.







## நிகழ்நிலை வகுப்புக்களுக்காக மாணவர்களுக்கு வரைபட்டிகைகள் வழங்கல்

♦ 2020.07.03 அன்று வரைபட்டிகைகள் (Tablets) இரவல் முறையில் மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வு கல்லூரியில் நடைபெற்றது. கொவிட் 19 பெருந்தொற்றுக் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமையால் கல்விச் செயற்பாட்டை வினைத்திறனாக முன்னெடுக்கும் வகையில் பாடசாலையின் வேண்டுகோளுக்கு அமைய ஐக்கிய இராச்சிய (UK) பழைய மாணவர் சங்கத்தினால் முதல் தொகுதியாக 49 வரைபட்டிகைகள் பாடசாலைக்கு கையளிக்கப்பட்டது அவை மாணவர்களுக்கு இரவலடிப்படையில் வழங்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு மட்டும் பயன்படக்கூடிய வகையிலான பாதுகாப்பு அம்சங்களுடன் வழங்கப்படுகின்றன. இவ் வரைபட்டிகைகளில் ஆசிரியர்களின் கற்பித்தல் காணொளிகள் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன.





## சுயகற்றல் மேம்பாடு

♦ கொவிட் 19 பெருந்தொற்றுக் காலத்தில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த போதிலும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் வீழ்ச்சி ஏற்படாது நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் தொடர்ச்சியாக மாணவர்கள் பாடசாலை நூலகத்திலிருந்து நூல்களைப் பெற்று வீட்டிலிருந்து சுயகற்றலை மேம்படுத்தும் வண்ணம் விசேட நூலகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது.




## ஆசிரியர் கௌரவிப்பு

♦ 2020.07.12 அன்று Covid -19 இடர் காலத்தில் மாணவர்களுக்கு பணியாற்றிய எமது கல்லூரியின் ஆசிரியர்கள், கல்விசார உத்தியோகத்தர்கள், இணைந்து பணியாற்றிய அயற்பாடசாலை ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் கௌரவிக்கப்பட்டனர்.







## நிகழ்நிலை வகுப்புக்களின் விரிவாக்கம்

♦ 2020.07.14 அன்று எமது பாடசாலை நிகழ்நிலை (online) வகுப்புக்களை மாகாண கல்வித்திணைக்களத்தின் உதவியுடன் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பயன்பெறக்கூடிய வகையில் கொண்டு சேர்த்தல் செயற்பாடு இடம்பெற்றது.



மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE
Fax :-021-224 1383
email :- npeducation@yahoo.com
Chemmany Road, Nallur, Jaffna.
Web:- www.edudept.np.gov.lk / www.npedu.sch.lk
NP/20/Dev/02
Date: 2020.07.14

021-224 2800/ 0778759625- PDE
021-224 2801- APDE Admin
021-224 2802- APDE Dev
021-224 2803- APDE Gen Admin
021-224 2804- Chief Accountant
email :- npeducation@yahoo.com - Admin
npdeplan@gmail.com- Planning
npedufin@gmail.com - Finance
emisnp@gmail.com -EMIS
021-224 2805- AO
021-224 2806 - Planning
021-224 2807/8/9 - General
021-224 2810 - EMIS

## பாடசாலைப் பேரூந்து திருத்தம்

♦2020.07.29 அன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பேரூந்து முற்றுமுழுதாக சீரமைக்கப்பட்டு புதுப்பொலிவு பெற்று மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. திரு.ஜெயபிரகாஸ் (89 உயர்தரம்) மற்றும் திரு.அமிலன் (90 உயர் தரம்) வழங்கியிருந்த விளையாட்டுக்கான நிதியத்தினூடாக இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.







**மாணவர் முதல்வர்களுக்கான சின்னஞ் சூட்டுதல்**

♦2020.08.08 அன்று மாணவர் முதல்வர்களுக்கான சின்னஞ்சூட்டல் வைபவம் நடைபெற்றது. Prefect badge pinning ceremony










**மாணவர்கள் பெற்ற சாதனைகள்**

♦ 2020.08.16 அன்று மொரட்டுவைப் பல்கலைக் கழகத்தால் நடாத்தப்பட்ட நிகழ்நிலைக் கணிதப் போட்டியில் எமது கல்லூரி மாணவர்களான சிவமைந்தன், ஆதிரையன் ஆகியோர் வெள்ளிப் பதக்கமும், வெண்கலப்பதக்கமும் பெற்று வெற்றியீட்டினர்.




♦2020.08.26 அன்று சர்வதேச உயிரியல் ஒலிம்பியாட் -2020 போட்டியில் இலங்கை அணிசார்பாக பங்கேற்ற யாழ் இந்துக் கல்லூரி மாணவன் அபிநந்தன் அருளாநந்தம் அவர்கள் வெண்கலப்பதக்கம் பெற்று சாதனை படைத்தார்.

Results of IBO Challenge 2020 - [https://ibo2020.org/en/ibo-challenge-2020/results/](https://ibo2020.org/en/ibo-challenge-2020/results/)




**வகுப்பறைகளை அபிவிருத்தி செய்தல்**

♦ 2020.09.18 அன்று யாழ் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் கொழும்பு கிளையினதும் பாடசாலைப் பெற்றோரினதும் பங்களிப்புடன் தரம் 9 வகுப்பறைகள் புனருத்தாரணம் செய்யப்பட்டு திறன் வகுப்பறையாக (smart classrooms) மாற்றப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.





## பாடசாலை மட்ட தொழில்சார் ஆசிரியர் அபிவிருத்தி

♦ 2020.09.21 அன்று ஆசிரியர்களின் ஆங்கில வாண்மைத்துவத்தை விருத்தி செய்வதற்காக ஞானம் கல்வி நம்பிக்கை நிதியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட "ஆங்கில திறன் விருத்தித் திட்டம்" எனும் விசேட ஆங்கில செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பணம் திண்ணை விடுதியில் ஆரம்பமானது. இதில் வளவாளராக பிரிட்டிசுஷ் கவுன்சில் இலிருந்து செல்வி துளசி முத்துலிங்கம் கலந்து கொண்டார்.





## பிரார்த்தனை மண்டபத்தின் பெருமை

♦ 2020.09.28 அன்று பிரார்த்தனை மண்டபம் திறக்கப்பட்ட தினத்தில் (1895.09.28 –2020.09.25) 125 ஆண்டுகள் பழமையான கல்லூரியின் வரலாற்று பொக்கிசமான பிரார்த்தனை மண்டபம் தொல் பொருள் திணைக்களத்தினால் தொல்லியல் கட்டளைச் சட்டத்தின் 16ம் பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் மூலம் புராதனச்சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.





## மாணவர்கள் எங்கள் எதிர்காலம்

♦ 2020.9.29 அன்று எமது மாணவர்களின் பெருமையையும் அவர் தம் எதிர்காலத்தையும் அனைவரும் உணரும் வண்ணம் சிறுவர் தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.




இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 23.06.2023ல் வெளியிடப்பட்டது

## Donation - Things

| No | Date | Donors details | Donated Items | No. of Items | Place | Amount | Donation Receipt No | Master Inventory | Inventory fo-lio No |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 06.07.2020 | Mr.S.Harikaran (A/L 89 Old Boy) | Digital Thermometer | 2 | School | | 4667 | Vol III P 52 | Book 14 Page 5 |
| 2 | 08.09.2020 | Mr.K.Gajapathy (6B Parent-2020) | Vacumm Cleaner | 1 | Grade 6 class | 9,205.50 | 4672 | V III P 70 | Book 15 Page 53 |
| 3 | 07.09.2020 | 6B Parent (2020) | Multimedia Speaker | 1 | For 7B Class-rooms | | 4670 | Vol III P 37 | Book 15 Page 53 |
| 4 | 07.09.2020 | 6F Parents (2020) | Intel I5 - 10400 2.90GHZ | 1 | For 7F Class | 63,000.00 | 4671 | Vol I P 61 | Book 15 Page 69 |

## Donation - School Based Activities

| No | Date | Name | Address | Amount | Purpose |
|---|---|---|---|---|---|
| 1 | 12.07.2020 | Jaffna OBA | | | Teachers Honoring Ceremony for Covid 19 activities in Green Grass Hotel |
| 2 | 18.09.2020 | 2002 A/L batch | | Rs 40000.00 | Prefect board- For Environmental Activities |

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 23.06.2023ல் வெளியிடப்பட்டது

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 23.06.2023ல் வெளியிடப்பட்டது

## Donation for Prize Fund

| No | Date | Doner | For whom | Amount |
|---|---|---|---|---|
| 1 | 18.03.2020 | 11C Class of 1995 - Through OBA Jaffna | Best Scouts award—Memory of sinnathamby Kenga | 100,000.00 |
| | | Shanmugasuntharam Sivakumaran Through OBA Jaffna | Memory of Shanmugarajah Kanagasabay | 110,736.00 |
| 2 | 01.05.2020 | Dr.Y.Yogeswaran | Memory of Veluppillai Sounthariyamma | 100,000.00 |

## Donations - Book

| No | Date | Donors details | Donated Books | No of Items | Donation Receipt No | Inventory folio No |
|---|---|---|---|---|---|---|
| 1 | 09.07.2020 | Mr.T. Piratheepan Teacher Jaffna Hindu College | Books Organic Chemistry | 4 | 4668 | Page 218, S.No11150-11152 |
| 2 | | | Chemistry Book | 2 | | Page 210,S.No 10775-10776 |
| 3 | 11.08.2020 | Mr.N.Laksmanrasa Delft | மாறும் திசைகள் | 1 | 4669 | Page 218, S.No 11141 |